**THE LABOUR COURT, SALEM**
**CAMP COURT AT DHARMAPURI**
**I.D.No. 5 Of 2020**

**<u>02.05.2025</u>**

**MW1 – திரு. கந்தசாமி**

குறுக்கு விசாரணை– (மனுதாரர் தரப்பில்)

நான் தற்போது எதிர்மனுதாரர் கழகப்பணியில் இல்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் கழகத்திற்காக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்குமாறு எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. 27.10.2009 ல் நான் தணிக்கையாளராக பணியில் இருந்தேன் என்பதை காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பரிசோதனை அறிக்கையில் கையெழுத்து போட்டுள்ளேன். அப்போது நான் தலைமை அலுவலகத்தில் பணியில் இருந்தேன். கிருஷ்ணகிரியில் இருந்து பெங்களூர் வரை வழித்தடத்தில் எத்தனை ஸ்டேஜ் எந்தெந்த ஊர் பெயரில் உள்ளது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அன்றைய தினம் 2 பரிசோதகர்கள் பரிசோதணைக்கு சென்றோம்.

27.10.2009 ம் தேதி பரிசோதணை செய்ததாக சொன்ன தேதியிலேயே அறிக்கை தலைமை அலுவலகத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் பரிசோதணை செய்யும்போது இரவு நேரம் என்பதால் மறுநாள் காலை 10.00 மணிக்கு தலைமை அலுவலகத்தில் அறிக்கை எல்லா வழக்குகளிலும் தாக்கல் செய்ததுபோல் இதிலும் தாக்கல் செய்துள்ளோம். எங்களது பரிசோதணை அறிக்கையில் பயணச்சீட்டு இல்லாமல் பிடிபட்ட 4 பயணிக்ளுக்கான பெயர் விபரங்கள் குறிப்பிடவில்லை என்றால் பரிசோதணை அறிக்கையில் குறிப்பிடவில்லை. ஆனால் பயணிகளின் வாக்குமூலங்களில் அவர்களது பெயர் விபரங்கள் குறிப்பிடப்பட்டுளளது. கிருஷ்ணகிரியில் இருந்து நாங்கள் பரிசோதணை செய்ததாக சொல்லக்கூடிய கூடல் கேட் சுமார் 85 கி.மீ துாரத்தில்

இருந்தது. இவ்வளவு தூரம் பேருந்து செல்லும் வரை நடத்துநர் பயணச்சீட்டு கொடுக்கவில்லை என்று பயணிகள் ஓட்டுநரிடமோ, சக பயணிகளிடமோ புகார் சொல்லவில்லை என்றால் டிக்கட் இல்லாமல் பயணிகள் ஒசூரில் ஏறி கூடல்கேட்டில் இறங்குபவர்கள். சம்பந்தப்பட்ட பயணிகள் தங்களுக்கு பயணச்சீட்டு கொடுக்கவில்லை என ஓட்டுநரிடமும், சகபயணிகளிடமும் தெரிவித்துள்ளதாக பயணிகள் கொடுத்த வாக்குமூலங்களில் சொல்லியுள்ளார்களா என்றால் இல்லை.

பேருந்தை கூடல்கேட் என்னும் ஊரில் நிறுத்தும்போது சாயந்திரம் சுமார் 7.30 மணி இருக்கும். கூடல்கேட்டில் பணம் கொடுத்து டிக்கட் பெறாத 4 பயணிகள் இறங்கினார்கள். பயணிகள் இறங்கியபோது தானாக முன்வந்து நடத்துநர் பணம் கொடுத்தும் டிக்கட் தரவில்லை என சொன்னார்களா என்றால் நாங்கள் டிக்கட் கேட்கும்போது அவர்கள் சொல்லிதான் ஆகவேண்டும். தணிக்கைக்காக பஸ் சுமார் 15 நிமிடம் நின்றது. அப்போது ஓட்டுநர் வண்டியை நிறுத்திவிட்டு வந்து படிக்கட்டுக்கு அருகில் வெளியில் நின்று விசாரிக்கப்பட்டார் என்றால் சரிதான். பயணிகள் இறங்கியது பேருந்தின் முன்படிக்கட்டா, பின்படிக்கட்டா என ஞாபகம் இல்லை. பயணிகள் மற்றும் ஓட்டுநரிடமிருந்து வாக்குமூலம் வாங்கியதற்கான பேப்பர்கள் எங்கிருந்து கிடைத்தது என்றால் நாங்களே வைத்திருந்தோம். வாக்குமூலங்களை எங்குவைத்து எழுதி கொடுத்தார்கள் என்றால் பேருந்திலேயே எழுதிக்கொடுத்தார்கள். அந்த பயணிகளை மீண்டும் பேருந்தில் ஏற்றிக்கொண்டோமா என்றால் இல்லை. அவர்கள் அங்குதான் இறங்கவேண்டும் எழுதிக்கொடுத்துவிட்டு போய்விட்டார்கள். பணப்பையை எங்கு வைத்து பரிசோதனை செய்தோம் என்றால் கூடல் கேட்டிலேயே வைத்து பரிசோதனை செய்தோம். 10 நிமிடத்திலேயே கணக்கை சரிபார்த்து விட்டோமா என்றால் விபரங்களை பெங்களுர் பேருந்து நிலையத்தில் வைத்து எழுதினோம். தணிக்கைக்கு பிறகு கிளையில் மனுதாரர் எவ்வளவு வசூல் தொகை

செலுத்தினார் என்று எனக்கு தெரியாது. Ex.M8 பிரத்யேக பட்டியலில் அசல் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் நகல் ஆவணம் மட்டும் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களுடைய தணிக்கை தொடர்பாக நாங்கள் தாக்கல் செய்துள்ள 9 ஆவணங்களிலும் என்னுடன் வந்த சக தணிக்கையாளர் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். சக தணிக்கையாளர் பெயர் கூட பரிசோதனை அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். இருவர் தணிக்கை செய்யும்போது யார் தணிக்கை செய்கிறார்களோ அவர் பெயரை மட்டும் எழுதுமாறு நிர்வாக தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. பயணச்சீட்டு விநியோகம் எந்த நிலையிலிருந்து எந்த நிலை வரை எத்தனை எண்ணிக்கை கொடுக்கப்பட்டுள்ளது என்று பயணப்பட்டியலில்தான் சரிபார்க்கமுடியும் என்றால் சரிதான். அதனால்தான் பயணச்சீட்டின் விநியோகத்தின் உண்மைத்தன்மை தெரிந்துவிடும் என்பதால் பிரத்யேக பட்டியலின் நகலை மட்டும் தாக்கல் செய்துவிட்டு அசலை மறைத்துவிட்டோம் என்றால் அது நிர்வாகத்திற்குத்தான் தெரியும். தணிக்கையில் இருவர் ஈடுபட்டு ஒருவர் மட்டும் கையெழுத்து போட்டால் போதும் என நிர்வாகம் சொன்னதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் வாய்மொழி உத்தரவு. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் பேருந்து தணிக்கை செய்யவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் தணிக்கை செய்திருந்தால் அன்றைய தினமே தணிக்கை அறிக்கை கொடுத்திருப்போம் என்றும் என்னுடைய சக தணிக்கையாளரும் ஆவணங்களில் கையெழுத்து போட்டிருப்பார் என்று சொன்னால் இரவு நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பணியாளர்கள் இருக்கமாட்டார்கள் பணிமுடித்து மறுநாள் காலை அறிக்கை கொடுப்பதுதான் வழக்கம். என்மூலம் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் மனுதாரரை பழிவாங்க பொய்யாக ஜோடித்து தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் 4 பயணிகளிடம் கட்டணம் பெற்றுக்கொண்டு மனுதாரர் பயணச்சீட்டு தரவில்லை என்று சொல்லப்படுவது

பொய் என்றும், மனுதாரர் தவறு செய்யவோ, ஒழுங்கீனமாக நடந்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/ (M. Shanthi)
Presiding Officer,
Labour Court, Salem